குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.

அ.சா.1 சி.சி. எண்.56/2020

2023–ம் ஆண்டு ஏப்ரல் 24–ம் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சி 1–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரஸ்வதி | ஜாதி | |
| கணவர் பெயர் | கோவிந்தராஜ் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

எதிரி ஆஜர்

<u>முதல் விசாரணை.</u>

நான் ஓமலூர் ஈஸ்வரன் கோவில் அருகில் குடியிருக்கிறேன். கனகா மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிகிறேன். கடந்தத 05.12.2019–ம் தேதி காலை 7.00 மணியளவில் நான் மருத்துவமனைக்கு வேலைக்கு செல்வதற்காக ஓமலூர் பஸ் நிலையம் அருகே உள்ள சிவா காபி பார் அருகே நடந்து சென்று கொண்டிருந்த போது பின்னால் வந்து யாரோ என்னை இடித்த மாதிரி இருந்தது. நான் பாரக்கும் போது எனது கழுத்தில் அணிந்திருந்த தாலி கொடி செயின் 2–1/2 பவுன் எடையுள்ளது மற்றும் தாலி 1/2 பவுன் எடையுள்ள நகையை காணவில்லை. நான் சத்தம் போட்டேன். அக்கம் பக்கம் ஓடினார்கள் ஆனால் பிடிக்க முடியவில்லை. எனது செயினை எடுத்த ஆண் நபர் தருமபுரி மெயின் ரோடு பக்கமாக போய்விட்டார். அவரை பிடிக்க முடியவில்லை. நகையின் அப்போதைய மதிப்பு 60,000/–ம் ஆகும். இது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த புகார். அ.த.சா–ஆ.1 ஆகும். சுமார் 1 வருடம் கழித்து காவல் நிலையத்தில் இருந்து என்னை அழைத்து என் நகை கிடைத்து விட்டதாக சொன்னார்கள். எனது நகையை நீதிமன்றத்தில் மனு செய்து திரும்ப பெற்று கொண்டேன். தற்போது அந்த தாலியுடன் கூடிய தாலி கொடியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துகிறேன். அது அ.சா.பொ.1 ஆகும்.போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u> இல்லை.

சாட்சி. சரஸ்வதி

ஓம்/– ஜெ. ஹரிஹரசுதன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.